சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 06 ம் நாள் வியாழக்கிழமை

**இந்து திருமண முதலேற்பு மனு எண்.196/2025**
**(CNR No. TNTH050005532025)**

பிரியதர்ஷினி .... **மனுதாரர்**

/எதிர்/

பூவண்ணன் .... **எதிர்மனுதாரர்**

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 20.07.2026 ம் தேதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவராஜா, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராஜசேகர், B.Sc., LLB., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான:–

**உத்தரவு**

**1.** இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.12.2016 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, இந்து திருமணச் சட்டம் 13(1)(i–a)(ib) பிரிவுகளின் கீழ் விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம்:**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.12.2016 ம் தேதியன்று கம்பம் உத்தமபாளையம் அருள்மிகு காளத்தீஸ்வரர் ஞானம்பிகை திருக்கோவிலில் பெரியோர்கள் முன்னிலையில் வைத்து நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்திற்கு பின்னர் மனுதாரரும், எதிர்மனுதாரரும், எதிர்மனுதாரரின் சொந்த ஊரான அனுமந்தன்பட்டியில் இல்லற வாழ்க்கையினை தொடங்கினார்கள்

என்றும், மேலும் எதிர்மனுதாரர் எந்தவொரு வேலைக்கும் செல்லாமல் ஏற்கனவே வேலை செய்து வந்ததாக பொய்சொல்லி மனுதாரரை திருமணம் செய்துள்ளார் என்றும், மேலும் எதிர்மனுதாரர் தினந்தோறும் குடிபோதையில் வந்து தான் தொழில் செய்யப்போவதாகவும், மனுதாரர் வீட்டில் பணம் பெற்று வரும்படி மனுதாரரிடம் பிரச்சனைகள் செய்து மனுதாரருக்கு மனரீதியாக தொடர் தொந்தரவு அளித்து வந்துள்ளார் என்றும், மேலும் எதிர்மனுதாரர் மனுதாரரின் நகைகளை மனுதாரருக்கு தெரியாமல் எதிர்மனுதாரர் அடகு வைத்தும் விற்றும், போலி நகைகளை வைத்து நாடகமாடினார் என்றும், எதிர்மனுதாரருக்கு சென்னையில் வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருந்து வந்தது பின்னர் தான் தெரியவந்தது என்றும், எதிர்மனுதாரர் ஒவ்வொரு நாளும் குடிபோதைக்கு அடிமையாகியதுபோல் வீண் சந்தேகம் கொண்டு பிரச்சனைகள் செய்வதை வாடிக்கையாக கொண்டிருந்தார் என்றும், இவ்வாறு எதிர்மனுதாரரின் பொறுப்பற்ற குடும்ப நடத்தை, ஊதாரித்தனமாக இருந்து வருவது, எதிர்மனுதாரரை அடித்து துன்புறுத்துவது, எதிர்மனுதாரருக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருந்து வருவது போன்ற பொறுப்பற்ற செயலினால் மனுதாரர் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கும்மேலாக பிரிந்து வாழ்ந்து வருகிறார். எனவே, இனிமேலும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வது என்பது இயலாது என்ற நிலை ஏற்பட்டுள்ளதால், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்குமிடையே 04.12.2016ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கக்கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3.** எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 20.07.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் ஒரு குறிப்பாணையை தாக்கல் செய்து, அது இந்நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி குறிப்பாணையில் எதிர்மனுதாரர், இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த விவாகரத்து மனுவில் தன் மீது மனுவில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை நீக்கினால், தான் விவாகரத்து கொடுக்க முழு மனதுடன் சம்மதிக்கிறேன் என்பதை இந்த குறிப்பாணையின்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன் எனக்கூறியுள்ளார்.

**4. சாட்சியம் :**

இம்மனுவில் மனுதாரர் பிரியதர்ஷினி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் பூவண்ணன் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக எ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்,

**<u>6. தீர்வு :</u>**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது, வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த வழக்கு இறுதி விசாரணைக்கு வந்த போது, உபயமனுதாரர்கள் தரப்பிலும் திறந்த நீதிமன்றத்தில் இனிமேல் சேர்ந்து வாழ்வதற்கு வழி இல்லை என்றும், நீதிமன்றம் மூலமாக விவாகரத்து பெறுவது தான் இருவருடைய வாழ்க்கைக்கு சரியானதாக இருக்கும் என எடுத்துரைக்கப்பட்டது. அதை உறுதிப்படுத்தும் வகையில், மனுவின் மனுதாரர் பிரியதர்ஷினி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, கடந்த 20.07.2026 ம் தேதியன்று தனது நீதிமன்ற சாட்சியத்தில்,

> " திருமண வாழ்வின் பயனாக குழந்தை கிடையாது. கடந்த 6 வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம். எனக்கு ஆயுட்கால ஜீவனாம்ச தொகை எதுவும் தேவையில்லை. இனிமேல் சேர்ந்து வாழ்வதற்கு வழியில்லை என்பதால் ம.சா.ஆ.4 சமரச உடன்படிக்கையின்படி விவாகரத்து வழங்க சம்மதிக்கிறேன்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அதேபோல், இம்மனுவின் எதிர்மனுதாரரான பூவண்ணன் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தன்னுடைய சாட்சியத்தில்,

> " திருமண வாழ்வின் பயனாக குழந்தை கிடையாது. கடந்த 6 வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம். இனிமேல் சேர்ந்து வாழ்வதற்கு வழியில்லை என்பதால் ம.சா.ஆ.4 சமரச உடன்படிக்கையின்படி விவாகரத்து வழங்க சம்மதிக்கிறேன்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**8.** ஆகையால், மேற்படி உபயமனுதாரர்களின் வாய்மொழி சாட்சியத்தை பரிசீலனை செய்யும் போது, அவர்கள் இனிமேல் சேர்ந்து வாழ வழி இல்லை என்பதும், திருமணம் நடந்த 04.12.2016 ம் தேதிக்குப்பின்னர் அவர்களுக்குள்

தொடர்பிரச்சனைகள் ஏற்பட்டு, கடந்த 6 வருடகாலமாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பது வழக்காவணங்களை பரிசீலனை செய்யும் போது தெரிய வருகிறது. மேலும், எதிர்மனுதாரர் தனது வாய்மொழி சாட்சியம் மூலம் விவாகரத்து கொடுக்க சம்மதித்துள்ள நிலையிலும், அதேபோல், மனுதாரர் தனக்கு ஆயுட்கால ஜீவனாம்ச தொகை எதுவும் தேவையில்லை எனக்கூறியுள்ளார். எனவே, இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை எதுவும் இல்லை என்பதால் உபய மனுதாரர்களுக்குள் கடந்த 20.07.2026 ல் ஏற்படுத்திக்கொண்ட சமரச உடன்படிக்கையின்படி விவாகரத்து வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**9.** ஆகையால், மேலே தீர்வு கண்டபடி உபயமனுதாரர்களுக்கும் கடந்த 04.12.2016 ல் நடைபெற்ற திருமண பந்தத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானித்து இந்த மனு பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**10. முடிவில்,** இந்த மனு செலவு தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 04.12.2016 ல் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து (Divorce) வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரி பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 06.08.2026 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.08.06 16:29:30 +0530

**சார்பு நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :

ம.சா.1 ... பிரியதர்ஷினி – மனுதாரர்

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–</u>

ம.சா.ஆ.1 ... திருமண அழைப்பிதழ்

ம.சா.ஆ.2 ... புகைப்படம்.

ம.சா.ஆ.3 ... ம.சா.1 ன் ஆதார் அடையாள அட்டையின் நகல்

ம.சா.ஆ.4 ... 20.07.2026 ம் தேதியிட்ட சமரச உடன்படிக்கை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :–</u>

எ.ம.சா.1 ... பூவண்ணன் – எதிர்மனுதாரர்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>

எ.ம.சா.ஆ.1 ... எ.ம.சா.1 ன் ஆதார் அடையாள அட்டையின் நகல்

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.08.06 16:29:24 +0530

**சார்பு நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

Sub Court, UPM
O.P.196/2025
Fair Order
Dated.06.08.2026

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 06 ம் நாள் வியாழக்கிழமை

**இந்து திருமண முதலேற்பு மனு எண்.196/2025**
**(CNR No. TNTH050005532025)**

தேனிமாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தமபாளையம், காலேஜ் நகர் என்ற முகவரியில் குடியிருந்து வரும் பாண்டியன் அவர்களின் மகள் இந்து சுமார் 31 வயதுள்ள பிரியதர்ஷினி .... **மனுதாரர்**

/எதிர்/

தேனிமாவட்டம், உத்தமபாளையம் வட்டம், அனுமந்தன்பட்டி, கோவிந்தன்பட்டி கிராமம், ஆர்.சி.மேற்கு தெரு, கதவு எண்.5/31A, 12 வது வார்டு என்ற முகவரியில் குடியிருந்து வரும் ஜெயராஜ் அவர்களின் குமாரர் இந்து சுமார் 36 வயதுள்ள பூவண்ணன் .... **எதிர்மனுதாரர்**

இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.12.2016 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, இந்து திருமணச் சட்டம் 13(1)(i–a)(ib) பிரிவுகளின் கீழ் விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள்: 23.07.2025

நீதிமன்ற முத்திரைக் கட்டணம் : ரூ.50/– செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 20.07.2026 ம் தேதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவராஜா, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராஜசேகர், B.Sc., LLB., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான:–

**<u>நிறைவேற்றாணை</u>**

1. இம்மனு அனுமதிக்கப்படுகிறது.
2. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 04.12.2016 ல் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து (Divorce) வழங்கி உத்தரவிடப்படுகிறது.
3. செலவுத்தொகை இல்லை.

<u>செலவு தொகை பட்டியல் : இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை.</u>

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 06 ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.08.06 16:29:39 +0530

**சார்பு நீதிபதி,**
**உத்தமபாளையம்.**